# அடியாருக்கு அடியார்களோடு வாழ

எங்கும் நிறைந்தொரு வேதக்கரு பொருள்

இங்கு மலர்ந்ததுவோ

பொங்கும் மலர் சூழல் கங்கைஎன வந்து

என்னுள் கலந்தனவோ

திங்கள் விரிசடை ஈசன் மனம் வைத்து

இங்கு பிறந்தனனோ

சங்கத் தமிழ்கண்ட ஞான அருணையில்

சேமம் வளர்த்தனனோ

சேமம் வளர்த்திட பாயை விரித்தொரு

யாகம் வளர்த்தனனோ

இரட்டை விசிறிகள் விசிடும் ஓசையில்

மந்திரம் சொல்லினனோ

தெங்கு மரத்தின் காய்ந்த சிரட்டையில்

ஆகுதி போற்றினனோ

தீயொளி கேசிக யோகியனாய் இங்கு

தன்னை நிறுத்தினனோ

தன்னை நிறுத்திய யோகியை சூழ்ந்ததொரு

ராஜ்ஜியம்  வந்ததுவோ

வெள்ளை நிறக்கொடி வேதநெறிவழி

வாழ்க்கை மலர்ந்ததுவோ

கள்ளம் ஒழிந்தது காமம் அழிந்தது

காவியம் ஆனதுவோ

யோகிராமா சுரத்குமாரா வாழ்த்தொலி

கேட்டதுவோ

வாழ்த்திய நெஞ்சங்கள்  புண்ணிய
ஜென்மங்கள்

இங்கு கலந்தனரோ

சூழும் இருளினை நீக்கவென ஒரு

சொல்லை உணர்ந்தனரோ

வாழும் வகையென வாய்மைக்கு நேரென

வாக்கியம் கண்டனரோ

யோகிராமா சரத்குமாரா

என்றவர் பாடினரோ

யோகிராமா சரத்குமாரா

நித்தமும் பாடிடுவோம்

யோகிராமா சரத்குமாரா

நெஞ்சுக்குள் போற்றிடுவோம்

யோகிராமா சரத்குமாரா

நோயற்று வாழ்ந்திடுவோம்

யோகிராமா சரத்குமாரா

நிம்மதி நாமடைவோம்